**O.S.58/2021**

Date : 10.10.2022

வா.சா.1 : கந்தன்

குறுக்கு விசாரணை

வா.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

தாவா சொத்து விஜயநாராயணம் தாலுகா பகுதி 2 ல் உள்ளது என்றால் சரிதான். நான் படிக்கவில்லை. நான்குநேரி தாலுகா விஜயநாராயணம் கிராமம் படப்பார்குளம் கிராமம் பழநிவேல் நாடார் மகன் கந்தன் என்பது நான்தான். டேனியல் ஜவகர் என்பவரை எனக்கு தெரியாது. பாலையா நாடார் குமாரர் சுடலைக்கண்ணு என்பவரை எனக்கு தெரியாது. பரப்பாடி வில்லியம் நாடார் மகன் கிருஸ்மஸ் ராஜன் என்பவரை எனக்கு தெரியாது. தபசில் சொத்தை நான் யாரிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் 1987 ல் பற்பநாதன் ரெட்டியாரிடம் இருந்து வாங்கினேன். அவர் அந்த சொத்தை எப்போது கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. பிராதில் 1969 ம் ஆண்டு பற்பநாத ரெட்டியார் மற்றும் கிருஷ்ண ரெட்டியார் கிரையம் வாங்கியதாக கூறியதில் அசல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாமுவேல் ஜாக்கப் என்பவரை எனக்கு தெரியாது. அவர் இந்த வழக்கில் என்ன பதிலுரை போட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி என்ன பதில் எழுதியுள்ளார் என்று என் வழக்கறிஞரிடம் நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நான் பவர் கொடுத்தமாதிரி கட்சி செய்துள்ளார் நான் அவ்வாறு பவர் கொடுக்கவில்லை. பவரின் அடிப்படையில் கிரையம் பதிந்ததை ரத்து செய்ய எந்த நடவடிக்கையும் எடுத்தேனா என்றால் இல்லை. பதில் உரை எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய முதல் விசாரணையிலும் பவரை குறிப்பிட்டு எதுவும் மறுக்கவில்லை என்றால் சரிதான். என்னுடன் பிறந்தது சுடலைமணி, பெருமாள், நான் மற்றும் தங்கதுரை ஆகிய நான்குபேர்கள் ஆகும். சுடலை மணி மற்றும் தங்கதுரை தபசில் சர்வே நம்பர் மற்றும் வேறு சர்வே நம்பர் உள்ள சொத்துக்களை பொறுத்து பிரதிவாதிக்கு பவர் அடிப்படையில் கிரையம் கொடுத்து விட்டு சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என

வழக்கு போட்டு நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்கண்ட வழக்கு நிலுவையில் உள்ளது என்றும் என்னுடைய வழக்கறிஞர்தான் அதை நடத்தி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. நானும் என் சகோதர்களும் சொத்துக்களை கிரையம் கொடுத்து விட்டு அதன் பின்பு தன்னுடைய சொத்து என வழக்கு தாக்கல் செய்வதே வாடிக்கை என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தை பவர் அடிப்படையில் கிரையம் கொடுத்துவிட்டு அதை உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய மேலும் கால அவகாசம் வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டதால் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)